தமிழ்
மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு.

மலர் 2	ஜனவரி, 1942	இதழ் 1

கண் மருத்துவம்

T.S. அமிர்தலிங்கம் பிள்ளை
(Eye Specialist)

நீர் சூழ்ந்த இந்நிலவுலகில் வாழும் மக்கட்கு இறைவனால் கொடுக்கப்பட்ட கண்ணானது வெள்விழி, கருவிழி, (Cornea) பாவை (Pupil), சந்து, மேலிமை, கீழிமை என ஆறு அம்சங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இவற்றில் மேலிமையைப்பற்றி ஆராய்ச்சி செய்வோம்.

மேலிமையை மேலிதழென்றும், கீழிமையைக் கீழிதழென்றும், இவ்விரண்டினையும் இமையென்றும், குவளை என்றும், இதழென்றும், மடலென்றும், விளிம் பென்றும் பாகுபாடின்றிக் கூறுவது உலக வழக்கு. கண்ணை மூடித் திறக்கும்பொழுது இமை அசையும். குவளை அசைவற்றிருக்கும்.

கம்பராமாயணத்தில் :

"எண்ணுதற் காக்கரிது இரண்டு மூன்று நாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்"

என்ற செய்யுளில் முனிவருக்காக அமைத்திருந்த வேள்விச் சாலையை இராமரும் இலக்குமணரும் காவல் செய்தார்களாம். எவ்வாறெனில்: இலக்குமணரை வேள்விச்சாலையின் வாயிலுட்காரவைத்து ஸ்ரீஇராமர்

வேள்விச்சாலையைச் சுற்றி வருவாராம். அவ்வாறு சுற்றிவரும்போ தெல்லாம் வாயிலில் வந்தவுடன் 'இலக்குமணா! ஜாக்கிரதை என்று கூறுவாராம். ஆகவே, இங்குக் கொள்ள வேண்டிய தென்னவெனில்: ஸ்ரீஇராமர் வயதில் முதிர்ந்தவர். இலக்குமணர் வயதில் சிறியவர். இவருக்கு இளைய பெருமாள் என்ற நாமமுண்டு. இமை (Upper lid) மேலேயிருப்பதால் இராமருக்கு ஒப்பாகும். குவளை (Lower lid) கீழே யிருப்பதால் இலக்குமணருக்கு ஒப்பாகும். கண்ணிணை இமைக் கும்போது குவளை இருந்த இடத்திலேயே இருக்கிறது. இமை மேலே இருந்து கீழே வந்து குவளையைச் சந்திக்கிறது என்னும் பொருளைக் கம்பர் இச்செய்யுளிலடக்கி யிருப்பதைக் காண்க. தேவர்கள் கண் ணிமைப்ப தில்லையாம். ஆனதுபற்றி, அவர்கட்கு இமையாநாட்டத் தவர் என்று பெயர். மேலும், நாம் ஒரு பொருளை ஓரிடத்தில் மறந்து வைத்துவிட்டு வந்துவிடுகிறோம். பிறகு அந்தப் பொருளை எங்கே வைத்தோம் என்று சிந்திக்கும்பொழுது உற்றுநோக்கிப் பார்த்தால் கண் விழித்தபடி யிருக்கும். இமை அசைவற்றிருக்கும். மூச்சும் ஒடுங்கி யிருக்கும். இது அனுபவம். ஆகையாற்றான் இமைத்தலுக்கும் மறதிக்கும் சுவாசத்திற்கும் ஒற்றுமையுண்டென்பர் அறிஞர்.

ஜீவகாருண்யத்தோடு *தென்னாட்டாருக்கு எழுதிவைத்த ஸ்ரீ அகத்தியர் நயனநூலில் அடியிற்கண்ட செய்யுளைக் கூறியிருக் கின்றார்.

"சோதியி லிருபத் தேழு தொல்கரு விழியிற் பத்து
தீதுபன் மூன்றும் வெள்ளை சிறந்திடு சந்தி லொன்பான்
கோதைகேள் மூவெட் டாகும் குவளையி னிமையி னுள்ளே
ஏதமில் நயன மெங்கும் எழுந்தநோய் பதின்மூன் றாமே." என்

னும் இச்செய்யுள் கண்ணி லுண்டாகும் 96 நோய்களும் இன்னின்ன இடத்தில் இத்தனை வியாதிகள் உண்டாகின்றனவென்று உணர்த்து கின்றது. ஆகவே, இங்கு இமையில்மட்டும் இத்தனை நோயென்று கூறாமல் இமையிலும் குவளையிலும் இரண்டிலுமாக 24 வியாதிகள் பிறக்கின்றனவென்று கூறியுள்ளார். இவ்விருபத்துநாலு வியாதி களையும் யாமறியோம். அனுபவத்தில் கண்ட வியாதிகளைமட்டும் கூறுவாம்.

---

* தென்னாடென்பது தமிழ் வழங்கும் நாடேயாகும். தமிழ் வழங்கும் நாடுகள் பன்னிரண்டென்று முன்னோரிலே வகுத்திருக் கின்றனர். அஃதாவது :—

தென்பாண்டி குட்டம் குடம்கற்கா வேண்பூழி
பன்றி அருவா அதன்வடக்கு — நன்றாய
சீதம் மலாடு புனல்நாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்.

ஸ்ரீ அகத்தியர் வியாதிகளின் பெயரைக் கூறும்போது முதல் வியாதிக்கு "அக்கிரரோக" மென்று கூறியிருக்கின்றார். இது இமையில்வரும் வியாதிகளில் ஒன்று. அக்கிரம் என்பது வடமொழி. அதன் பொருள் முதன்மை.

1. அக்கிரம்

மெய்க்கரப் புத்துக் கண்ணில் மேனிமை கனத்துப் புண்ணும்
உக்கிரமாக நொந்து ஊறியே நீரும் பாயும்
சிக்கறத் தினவும்பீளை சினத்திடு முகங்கள் தானும்
அக்கிர ரோக மென்றே அறிந்தினர் புலவர் தாமே.

இதன் பொருள்:—கண்ணின் மேனிமை தடித்துப் புண்ணுகும். அதிகமான வலியுண்டாகி நீர் வடியும். பீளை (Mucus) சேரும். அரிப் புண்டாகும். முகம் சிவந்து காணும். இக்குணங்க ளிருக்குமாயின் அக்கிர ரோகமென்று புலவர்களே அறிவார்கள்.

இந்த வியாதி அனுபவமில்லாத கண் மருத்துவர்களுக்கு அடங்குவது அருமை. ஏனெனில், பொதுவாய் இதைக் கண் வியாதியென்று நினைத்துக் கண்ணுக்குள் மருந்திடுவார்கள். கண்ணிற்கும் இமைக்கும் சம்பந்தமே கிடையாது. சந்தனாதித்தைலம் முழுகிவரத் தீரும். சந்தனாதித்தைலம் பலவிதமுண்டு; கண்ணுக்கான சந்தனாதித் தைலத்தை முழுகவேண்டும். அதியாச்சரியப்படும்படி குணமுண்டாகும். இந்த ரோகம் ஆரம்பத்தில் உண்டாகும்போது இமை மயிர்க்கால்களில் சிறுசிறு கொப்புளங்கள் உண்டாகும். அவைகள் சிறிது நாட்களில் பழுத்து உடையும்; பிறகு உலர்ந்துபோகும்; பிறகு தோலுரியும்; மறுபடியும் கொப்புளங்கள் தோன்றும்; பிறகு பழுத்து உடைந்து உலர்ந்து தோலுரிந்து இவ்வாறாக விருந்து கடைசியாக இமை தடித்துப் புண்ணாகி முற்கூறிய சின்னங்களோடு வாதைப்படுத்தும். இதை ஆங்கிலத்தில் Herpes என்று கூறுவதுமுண்டு.

2. முடமயிர் (Ingrowing Eyelashes)

கனத்திமை தடித்துக் கண்ணும் கவிழ்ந்திடும் பார்வையாகும்
சினத்துடன் மயிருங் குத்தித் தினவும் நீர்பீளை சேரும்
இனத்துடன் பூவுங் காணும் இமையினில் மயிரும் நான்று
முளைத்திடு மாசந்தோறும் முடமயி ரென்னலாமே.

சூழமுளைக்கு மிமையடங்கச் சுருண்டுகுத்தி நீர்வடியும்
தாழவிழிக்குங் கருமணியில் சற்றேவெளுக்கும் அடைந்துவரும்
ஆழவிழியு மடங்கிவரும் அதிகந்தலைநோய் நாசியினீர்
மூடவிழிதா னரிதாகும் முடமயிரிது தாமெனலாமே.

இவற்றின் பொருள்:— கண்ணின் இமைகள் தடித்திருக்கும்; கவிழ்ந்த பார்வையாக விருக்கச்செய்யும். கண்கள் சிவந்திருக்கும். இமையிலுள்ள மயிர்கள் வளைந்து கண்ணுக்குள் உறுத்தும்; அரிப் புண்டாகும்; நீர் வடியும்; பீளை கட்டும்; கண்ணுக்குள் பூவுண்டாகும். பிரதிமாதமும் இமைமயிர்கள் உதிர்ந்து வளைவாகவே முளைக்கும்.

இமைகளில் முளைக்கும் மயிர்கள் சுருண்டிருப்பதால் அவைகள் முழியில் குத்தி நீர் வடியும். பூமியைப் பார்த்தவண்ணமாய்க் கண்ணை விழிக்கச் செய்யும். கண்கள் சிலசமயம் வெளுத்துக் காணும். விழிகள் ஆழத்தில் போய்க்கொண்டிருக்கும். மூக்கில் நீர் வரும். கண்ணை மூடுவது திறப்பது கஷ்டமாயிருக்கும். இக்குணங்களமைந்த நோய் முடமயிர் என்னப்படும்.

இது சாத்திய ரோகங்களிலொன்று. இதற்கு முற்காலங்களில் ஒழுங்குதவறி முளைத்திருக்கும் ரோமத்தின் அடியில் எள்ளின் கனத்திற்குச் சதையை நீவிக்கொண்டு ரோமத்தை வேரோடு களைந்து புண்ணை யாற்றுவதற்கேற்ற மருந்தைவைத்துக் கட்டிவிடுவது வழக்கம்.

மற்றோர் வழக்கமுமுண்டு. அதாவது: ஒரு வளைந்த கம்பியை எடுத்துக்கொண்டு நெருப்பிலிட்டுப் பழுக்கவைத்து விளிம்பில் சுட்டுவிட்டு ஆற்றிவிடுவது முண்டு. இதற்கொரு மருந்து பிரயோகமு முண்டு. அம்மருந்தை ஒரு எள்ளளவு எடுத்து விளிம்பில் எழுதிவிட முடரோமம் உதிர்ந்துவிடும். இந்த ரோகத்திற்குக் கருவியாடல், அனற்கோல் நாட்டல், மருந்துமுறை மூன்றும் கூறிவிட்டேன்.

3. மயிர்ப்புழுவெட்டு (Absence of Eyelashes)

நீட்டிய தினவுங்கூச்சம் நீர்வரு மிமையும் வீக்கம்
கூட்டிடும் பீளைசேரும் குருமுளை போலே தோற்றும்
நாட்டியே மயிருதிர்ந்து நற்சதை ரத்தம் வீழும்
காட்டிது மயிர்ப் புழுவெட்டு கண்டவ ருரைத்த வாறே.

இதன் பொருள்:— இமையிலும், குவளையிலும் அரிப்புண்டாகும்; கூச்சமிருக்கும்; நீர் வடியும்; இமைகள் வீங்கியிருக்கும்; பீளை கட்டும்; இமையிலும் குவளையிலும் சிறு முளைகள்போல் காணப்படும். இமையிலும் குவளையிலுமுள்ள மயிர்கள் உதிர்ந்து சதையில் இரத்தம் இழியும். இத்தகைய குணங்களிருந்தால் மயிர்ப் புழுவெட்டு என்று சொல்லப்படும்.

கோடும் புழுவெட்டு என்றோர் வகையுமுண்டு:—

போதவே யிமைகனத்துப் பொங்கிய தினவுண்டாகு
மூதவே யெரிப்புண்டாகு முதிர்ந்திடும் மயிர்கா லெல்லாங்
காதவே தலைகால்மெய்கள் கரகரவென்று தோன்றுங்
கோதவே யிமைகள்தாழுங் கொடும்புழு வெட்டதாமே.

இச்செய்யுளுக்கும் முற்கூறிய செய்யுளுக்கும் ஒரேஒரு வித்தியாசந்தா னிருக்கிறது. கோடும் புழுவெட்டு என்னும் ரோகத்திற்குத் தலை, கால் சீரமுழுவதும் கரகரவென் றிருக்கும். இதைத்தவிர மற்ற குணங்கள் இரண்டிற்கு மொன்றே.

இந்த ரோகமுள்ள வியாதியாளர்களைப் பார்க்க விகாரரூபத்தால் அருவருப்பா யிருக்கும். இது ஒரு சாத்திய ரோகந்தான். அதற்கென்று ஒரு மருந்திருக்கிறது. அதைப் பிரயோகம் செய்துவரச் சௌக்கியமாகி வருகிறது. இது எமக்கு அனுபோகம். சௌக்கியமானதற்கு அடையாள மென்னவெனில், மறுபடியும் அந்தச் சின்னங்களிருத்தலாகாது; உதிர்ந்த ரோமங்கள் நன்றாய் முளைத்துவிடுகின்றன. 30 வருடங்களுக்கு முன் இந்நோயால் துன்புற்றவர்கள் சுகமடைந்து இன்றைக்கும் ஆரோக்கியமா யிருக்கிறார்கள்; நேரில் வேண்டுமென்றாலும் பார்க்கலாம்.

4. பில்லம் (Trachoma)

இந்த நோயானது நீர்ப்பில்ல மென்றும், சதைப்பில்லம் அல்லது அமரப் பில்லமென்றும் இருவகைத்து.

நீர்ப்பில்லத்தின் குணம் :—

இமையைக் கடுத்து மேல்கனத்து இடுக்கி நீரும் பீளையிடும்
குமையச் சிவந்து வெளுப்புண்டாம் கூசி விழியும் கீழ்நோக்கும்
சமையத் திரண்டு புருவங்கீழ்ச் சதையும் வளர்ந்து உறுத்து விக்கும்
நிமையைத் திறக்கில் சதைமூடும் நீர்ப்பில்ல மென லாமே.

இதன் பொருள் :— இமையில் கடுப்புண்டாகி மேலிதழ் தடித்திருக்கும்; கண் இடுங்கியிருக்கும்; மிகுதியாக நீர் வடியும்; பீளைகட்டும். ஒருநாள் கண்கள் சிவப்பா யிருக்கும். ஒருமருந்தும் கண்ணிலிடாமலே ஒருநாள் தனக்குத்தானே வெளுத்துப் போம்; கண்கள் கூசும்; பார்வை பூமியைப் பார்த்தவண்ணமா யிருக்கும். மேலிமைக்குள் சதை திரண்டு வளர்ந்து உறுத்தலுண்டாகும். மேலிமையைப் புரட்டிப் பார்த்தால் சதை மூடிக் கிடக்கும். இவ்வகையான குணங்களிருந்தால் நீர்ப்பில்லம் என்று கூறப்படும்.

சதைப்பில்லம் (அமரப்பில்லம்) :—

கருகிய இமையி னுள்ளே கதித்ததுர் மாமி சம்போல்
அருவியே உறுத்தி நொந்து அதிகமாய்ச் சிவந்து கூசும்
மருவிய பூவுந் தோன்றும் மாறாதே பீளை பாயும்
பெருகிய நீரு முண்டாம் பில்லமா மென்று சொல்லே.

இதன் பொருள்:— இமையினுட்புறத்தில் தடித்த துர்மாமிசம் வளரும். கண்ணை இமைக்கும்பொழுதெல்லாம் வளர்ந்திருக்கும் துர்மாமிசமானது விழியில் அருவி உறுத்தி நோவச் செய்யும்; கண்கள் சிவந்திருக்கும்; கூச்சமுண்டாகும்; வெளிச்சத்தைப் பார்க்க முடியாது; கருவிழியில் (Cornea) பூவுண்டாகும்; ஓயாமல் பீளைசாடும்; எராளமாய் நீர் வடியும். இப்படியிருந்தா லதற்குப் பில்லமென்று சொல்லப்படும்.

மேலும், இவை இரண்டல்லாமல் வரட்பில்லமென்று ஒன்றுண்டு. அதன் குணத்தையாவது நோயின் பெயரையாவது நயனவிதி ஐந்நூறு என்னும் நூலில் கூறுவிடினும், யாம் அனுபவத்திற் கண்டதை இங்ஙனம் எடுத்துரைப்பாம். ஏனைய குணங்கள் ஒன்றுமேயின்றி கண்ணிமையின் உட்புறத்தில் சதைமட்டும் வளர்ந்து அதனால் உறுத்தலுண்டாகிக் கண் சிவந்திருக்கும். இலகுவில் சதையைக் கரைத்து சீக்கிரத்தில் இந்நோயைப் போக்கலாம். ஸ்ரீநாகமுனிவர் தமது நயன நூல் 200ல் 96 வகைப் பிணிகளையும் நீர், இரத்தம், சதையென்று மூவகையாகப் பிரித்திருக்கின்றார். உதாரணமாகப் படலமென்ற நோயை நீர்ப்படலமென்றும், இரத்தப் படலமென்றும், சதைப்படலமென்றும் மூவகைப் படலங்களாகவும், படர்த்தி என்ற பிணியை நீர்ப்படர்த்தி, இரத்தப்படர்த்தி, சதைப்படர்த்தி என்ற மூவகைப் படர்த்திகளாகவும், குவை என்ற வியாதியை நீர்க்குவை, இரத்தக்குவை, மாங்கிஷக்குவை என்ற மூவகைக் குவைகளாகவும் கூறி இருப்பது போலவே பில்லத்தையும் நீர்ப்பில்லம், அமரப்பில்லம், (அமரம் என்பது துர்மாமிசம்) குடற்பில்லம் என்று மூவகையாகப் பிரித்திருக்கிறார். இக்கொடுமையான வியாதி கர்மரோகங்களில் ஒன்றாகும். அதற்கு வேண்டிய கர்ம சாந்திகளையும், தேவாராதனைகளையும் செய்து மருத்துவம் செய்ய ஆரம்பிப்பது நலம். எமது அனுபவத்தில் உலகில் எத்தனையோ வகுப்பினர் இருக்க அருமறையோதிய அந்தணர்கட்கும், அவர்களுள் பெரும்பாலும் பெண்பாலருக்கும், முகம் மதிய பெண்பாலருக்கும் மட்டும் இந்நோய் உண்டாகி வாட்டிவருகிறது; காரணம் யாதோ அறிந்திலேம். ஆங்கிலக் கண்வைத்திய நிபுணர் மிஸ்டர் எலியட் என்ற ஐரோப்பியரும் இவ்வனுபவத்தை, தான் கண்டதாக என் நண்பர் ஒருவரிடம் பேசியதாக யாம் கேள்விப்பட்டு மகிழ்ந்தனம். இதற்கு ஔடதப் பிரயோகமின்றி சஸ்திரப்பிரயோகமும் செய்வதுண்டு. இரத்தப்பில்லமா யிருந்தால் இரத்தக்குழலை ஊசியினால் குத்தி இரத்தத்தைப் போக்குவதாகும். ஆங்கில பண்டிதர்களும் இவ்வாறு செய்வதுண்டு. இஃதில்லாமல் அட்டையை விடுவதுமுண்டு. வைத்தியர்களும் ஏனையோர்களும் அட்டைவிடும் பிரயோகத்தை எளிய காரியமாக நினைத்து செய்துவருகிறார்கள். அட்டைவிதி என்று ஸ்ரீஅகத்தியனார் தனியாக ஒரு நூலை ஏற்படுத்தியிருக்கிறார். அதில் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திராதி நான்கு

சாதிகளையும், ஆண் பெண் என்ற பாற்பிரிவையும் கண்டுபிடித்து விலக்கியவற்றை ஒழித்து கூறியவற்றைக்கொண்டு இரத்தத்தைப் போக்கவேண்டும். அதிலும் அமுத நிலையையும் கண்டு செய்தல் வேண்டும். "அமுதநிலை" என்ற செய்யுளில் துவாதசியில் துயின்றிடும் நெற்றி "திரயோதசியில் சேர்ந்திடும் புருவம்" என்று கூறியிருத்தலானும், இந்திந்த இடங்களில் இந்திந்தத் திதிகளில் அமுதம் இருப்பதால்:

சஸ்திரம் பண்ணில் தானெழும் நோய்கள்
கொப்பளித் திடினும் குடித்துப் படினும்
தப்பிலா தரவம் தான்கடித் திடினும்
அட்டை கடிக்கினும் அடிதடிச் சிலந்தியும்
வயிற்றிற் பிணியென மரணம தாமே
காசினி தனிலே கைவிட தாரி
திதிகளை யறிந்து செய்திடப் பலிக்கும்
மலைதிகழ் முனிவர் மகிழ்ந்துரைத் தனரே".

திதிகளையறிந்து சஸ்திரப்பிரயோகம் செய்யவேண்டுமென்றும், திதிகளையறிந்து அட்டையை விடவேண்டுமென்றும்; (அட்டை - Leech) அமுதம் என்பது ஜீவநிலையானதால் அந்த திதியில் அமுதம் நிற்கிற அந்த இடத்தில் சஸ்திரம் செய்தாலாவது அல்லது அட்டையை விட்டாலாவது அல்லது வேறு எந்த பிரயோகம் செய்தாலாவது மரணத்தையுண்டுபண்ணு மென்பதை இச்செய்யுளால் உணர்வதாயிற்று. அனுபவமும் அவ்வாறே. இந்த நோய்க்கு ஔஷத சஸ்திரமுறைகள் ஒழிய இன்னும் எத்தனையோ பற்றுகளும், புறவளையமும், வேதுக்களும், நசியங்களும், வர்த்திப் புகைளும், தைலங்களும் செய்யவேண்டியிருக்க நோய் இன்னதென்று அறியக்கூடாத பாமரர்கள் கண்ணின் நோக்காட்டைப் பார்த்து சாதாரண கண்ணோயென்று நினைத்து தமக்குத் தோற்றியவற்றை யெல்லாம் பிரயோகம் செய்து கண்ணை நாசமாக்கி விடுகிறார்கள். இந்த நோய்க்குத் தகுந்த மருத்துவம் செய்பவர் சிலரேயாவர். இந்நோய்க்குச் சில பண்டிதர்கள் இமையைப் புரட்டி வைத்துக்கொண்டு துருசு என்று சொல்லப்பட்ட Blue vitrial ஐக் கொண்டு தேய்த்துவிடுவ துண்டு. அப்படித் தேய்க்கும்போது நோயாளிக்குக் கண்ணில் எரிச்சல் சகிக்க முடியாததாயிருக்கும். பில்லரோகத்திற்குத் துருசக் கண்ணிலிட்டாலும் அல்லது துருசு கலந்த மருந்துகளைக் கண்ணிலிட்டாலும் கருவிழியில் பூவிழுந்துவிடும். இந்த நோய்க்குக் கண்ணில் பூவுண்டாதல் இயற்கை குணமாயிருக்க அதற்கு மருத்துவம் செய்யப்புகுந்தவர்களும் தாங்களிடும் மருந்தினால் பூவுண்டாகக் காண்பது குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வதை யொக்குமன்றோ? இஃது இராக்கத சிகிச்சையாகும். இவ்வாறு பண்டிதர், நோயாளி ஆகிய இருவரும்சிரமப்பட்டும் நோய் விலகுவதில்லை.

நான் பார்த்த மற்றோர் சிகிச்சையும் என் ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது: தஞ்சாவூர் தாலூக்கா நல்லிச்சேரி என்ற கிராமத்தில் இராமச்சந்திர ஐயர் என்பவர் ஒருவரிருந்தார். அவருக்கு பில்லம் என்ற இக்கொடிய நோய் அநேக வருஷங்களாக வாட்டி வந்தது. என் தந்தையாரும் அவருக்கு சிகிச்சை செய்து வந்தார்; குணப்படவில்லை. கடைசியாக அவர் சென்னைக்குச் சென்றார். அப்போது சென்னையில் போப் (Pope) என்ற ஒரு கண் வைத்திய நிபுணரிருந்தார். அவர் இது அசாத்திய ரோகமென்று கண்டு அந் நோயாளியின் வியாதியாகிய பில்லத்திற்கு இருப்பிடமாயிருந்த இமைகளிரண்டையும் நறுக்கி எடுத்துவிட்டு ஆற்றிவிட்டார். அவர் முகத்தை நான் பார்த்தபொழுது கண்கள் விகாரரூபமா யிருந்தது பற்றிப் பயத்தை உண்டுபண்ணிற்று. பிறகு, அதிகநாள் அவர் ஜீவித்திருக்கவில்லை. இவ்வாறு பண்டிதர்களும் பிணியாளர்களும் துன்பப் படுகிறார்கள். இருவர்களுடைய சிரமத்தையும் பரிகரிக்க எம்மிடம் இதற்கு நிச்சயமாய் நிவர்த்திக்கத்தக்க (Specific remedy) ஓர் மருந்துண்டு. ஆச்சரியப்படும்படியான விதமாய் குணப்படுத்தி வருகிறது. இதை ஏன் உபகாரமாக வெளியிடக்கூடாது எனில்? மட்டற்ற சிரமப்பட்டுக் கண்டுபிடித்த மருந்தாகும். அதை வெளியிடுவதென்றால் என் மனம் சகிக்கவில்லை. என்னுடைய கண்மருத்துவக் கலையைக் கற்றுக்கொள்ளப் பிரியங்கொண்டு எம்மிடம் மாணவர்களாய் வருபவர்கட்கு ஒருவித ரகசியமுமின்றி அதிகப் பிரியத்தோடு அவர்களை என் புத்திரர்களாகப் பாவித்து நிபுணர்க ளாக்குவேன் என்பது சரதம்.

5. நிமைக் கழலை

இந்நோய் நூல்களில் கூறப்படவில்லையாயினும், நிமையில் ஒரு கழலை உண்டாகிறது. அதை ஆங்கில மருத்துவர்கள் சஸ்திரப்பிரயோகம் செய்து கழலையை எடுக்க வேண்டுமென்று சொல்லுகிறதோடல்லாமல் சஸ்திரப்பிரயோகமும் செய்துவருகிறார்கள். அப்படிச் செய்வதினால் கழலை எடுபட்டுப்போவது சௌகரியமாயினும் தோல் சுருக்கமுண்டாகிறது. சித்தவைத்திய முறையில் கழலையின்மேல் மருந்தினால் புண்ணாக்கிவிட்டால் கழலை போனவிடம் தெரியாமல் மறைந்துபோவதோடு புண்ணும் ஆறிவிடுகிறது.

6. நிமை அக்கி

இந்நோயும் நயன நூல்களில் கூறப்படவில்லை. அதன் குணமென்னவெனில், முதலில் நிமையில் ஒரு சிறு கொப்புளம்போல் உண்டாகிறது. பிறகு, இமை தடிப்பாக வீங்குகிறது. பிறகு நெற்றி, கன்னம் இவை பயங்கரமாக வீங்கிவிடுகின்றன. கண் இருக்கிற

இடமே தெரியாமல் வீக்கம் மூடிவிடுகிறது. கண்ணுக்குள்ளிருந்து வடித்த கஞ்சியைப்போல் வெண்மையான சீழ் ஓய்வில்லாமல் வடியும். இவ்வளவு பயங்கரமான வியாதியை நாம் வீக்கத்தைப் போக்கியும் கண்ணுக்கு யாதொரு கெடுதியுமில்லாமலும் ஒரு வாரத்திற்குள் சௌக்கியப்படுத்தி வருகிறோம். தஞ்சையில் மானோஜியப்பா வீதியில் கண்ணுசாமி பிள்ளை யென்று ஒரு வைத்தியரிருந்தார். அவருக்கு மூத்த சம்சாரத்தின் பெண்ணொன்று இருந்தது. அதன் பெயர் தர்மாம்பாள். அப்பெண்ணுக்கு இக்கொடிய நோய் வந்துவிட்டது. அவர் தாயற்ற குழந்தையாயிற்றே இதற்கிந்த நோய் வந்திருக்கிறதே என்று அநேக கண்வைத்தியர்களை யோசித்தபோது அது இன்ன தென்று தெரியவில்லையே யென்று சொல்லிவிட்டார்களென என்னிடத்தில் வந்து சொல்லிக்கொண்டு பெண்பாலைப்போல் கண்ணீர் விட்டுக் கலுழ்ந்தார். உடனே அவருக்கு வேண்டிய தைரியம் சொல்லித்தேற்றி மூன்று நாட்களில் கண்ணில் யாதொரு குற்றமுமில்லாமல் சௌக்கியப்படுத்திவிட்டேன். அவர் எனக்குப் பரம்பரையாக சிநேக முள்ளவரா யிருந்ததோடு நாங்களிருவரும் வைத்திய சகோதரர்களா யிருந்தோம். ஆனபடியால், பிரதிப்பிரயோசனம் ஒன்றும் பெறவில்லை. இம்மாதிரி ரோகத்தை என் அனுபவத்தில் ஏராளமாய்ச் சௌக்கியப் படுத்தி யிருக்கிறேன். இமையிலுண்டாகும் ரோகங்களில் இந்த ஆறு ரோகங்கள்தான் என் அனுபவத்தில் வந்தவைபாகும். இவ்வருமையான ரோகங்களுக்கு ஆச்சரியகரமான மருந்துகளும் சிகிச்சைகளும் எம்மிடம் இருப்பது இரத்தினத்தையுடைய நாகமானது யாரிடத்தில் இரத்தினத்தைக் கொடுப்பது என்று கலங்குவதுபோல் இதை ஏற்றுக்கொள்ள மாணவர்களில்லையே என்று மயங்குகின்றேன். எல்லாம்வல்ல இறைவன் என்று அருள்புரிவாரோ!

வாழிய நலனே! வாழிய நலனே!!

அப்பிரகம்

Dr. R. தியாகராஜன், L. I. M.

உபரசம் 120 ல் ஒன்றாகிய அப்பிரகம் பூவிந்துநாதம், மனோன் மணிநாதம், பிரகாச சக்தி, கேசரம், கௌனம், மாவிந்து, அம்பரம், காக்கைப்பொன், துல்லியம் என்ற வேறு பெயர்களினாலும் வழங்கப் படுகின்றது. இது மலைகளில் முக்கியமாய்க் கிடைக்கின்றது. இந்தியாவில் நெல்லூர், அஜாரிபாக், மத்தியமாகாணம், இராஜபுதனம், தரங்கம்பாடி போன்ற இடங்களில் அப்பிரகம் கிடைக்கின்றது. இது படல் படலாகவும், ஒளியுடனும், வளையத்தக்கதாயும், மிருதுவாகவும் இருக்

கும். இது மருந்து பாகங்களுக்கும், பல்லக்கு, விசிரி, மணவரை முதலியவற்றை அலங்கரிப்பதற்கும் உபயோகமாகின்றது. இதனை சிங்களவர்கள் 'மிர்னன்' என்று கூறி குடைகளுக்கு அலங்காரம் பண்ணுவதற்கு உபயோகிக்கின்றனர்.

போகர் 7000 ம் மூன்றும் காண்டத்தில் பார்வதியின் ருது பூமியிலும் மலைகளிலும் படிந்து அப்பிரகம் உற்பத்தியானதென்றும், நால் வகைச் சாதியென்றும், நான்குவகை நிறத்தை உடையதென்றும் கூறப்பட்டிருக்கின்றது. அவையாவன: பிநாக அப்பிரகம், நாக அப் பிரகம், மண்டூர அப்பிரகம், வச்சிர அப்பிரகம். பிநாக அப்பிரகம் ஏமநிறமாயும், கட்டியை உலையில் வைத்து துருத்திகொண்டு ஊத மடல்மடலாய் விண்டு போகுமென்றும், ரசத்தைக் கட்டுமென்றும்; நாகாப்பிரகம் வெள்ளை நிறமாயும் உலையில் வைத்தூத நல்லபாம்பு சிரலைப்போல் சீறுமென்றும், இதுவும் மண்டூகாப்பிரகமும் ஒன்றுக்கு மாகாதென்றும், வெண்நிறத்தை யுடைய மண்டூகாப்பிரகத்தை கொல் லனுலையிலிட்டூத தவளையைப்போல் குதித்து வீழுமென்றும், சிவந்த தேன் வர்ணங் காணுமென்றும்; வச்சிர அப்பிரகம் கருநிறத்தை யுடையதென்றும், இரட்டைத்துருத்தி வைத்தூதினும் அசை யாமல் கிடக்குமென்றும், உத்தமமென்றும், காயசித்தி யோகசித்தியா மென்றும் கூறப்பட்டிருக்கின்றது. மற்றும், பிநாக அப்பிரகம் வாயுவை கண்டிக்கும். நாக அப்பிரகம் கபத்தை உண்டுபண்ணும்; மண்டூக அப்பிரகம் நோய் உண்டுபண்ணும், வச்சிர அப்பிரகம் சகல வியா தியையும் தீர்க்கும் என்று கூறியிருத்தலையும் காண்க, நிற்க, இதனை மருந்தாக உபயோகிக்கின் பற்பமாகவாவது செந்தூரமாகவாவது, சுண்ணமாகவாவது, களங்கு சத்தாகவாவதுதான் உபயோகிக்க வேண்டும். இதனை மருந்தாக்குமுன் சுத்திசெய்து கொள்ளவேண் டும். சுத்திசெய்யாது விடினும் சரியாக பற்பிக்கா விடினும் விடமித்து, இடுமருந்தால் நேரிடும் துன்பத்தைப் போல இதுவும் தீங்கை விளை விக்குமென்பதைக் கீழ்க்கண்ட பிரமாணங்களினு லறியலாம்.

சுத்திசெய்யா வப்பிரகந் துய்த்தார்க்குச் சோபையுடன்
சத்திரத்த காசந் தழையுமே — மெத்த
விடுமருந்துக் கேய்ந்தகுண மெல்லா மமைந்து
கெடுமருமைத் தேகமிதைக் கேள்.

"தப்பித மிலைச்சிறிது தப்பிலது தப்புமிகு
தத்துவரு முப்பிச மிதே" (தே. சேகரப்பா).

இந்த வப்ரக பற்பத்தா லெவர்க்கு மின்பங் களுண்டா
முந்துமிச் சரக்கின் சுத்திமுறை யெனிலின்றேற் றுன்பம்
வந்திடு மிதனுன் மெத்த மருந்திடு கெடுதிபோல
அந்த நோயகற்றுமாறே தறிந்திடின் றேன்றி சுக்கே. (தே: சே)

நிற்க, “ வன்மையா மப்பிரகத்தை உள்ளது சொன்னேங் காடி தன்னிலே ஊறப்போடே ” என்ற தொடரினுல் காடியில் ஊறவைத் தெடுக்கச் சுத்தியாமென்றும் அறியலாம்.

சேகரப்பாவிலே கூறப்பட்டுள்ள முறை பின்வருமாறு:

அப்பிரகம் ஒரு பங்குக்கு எட்டுப் பங்கு அகத்தி மலர்ச் சாறெடுத்துக் கடத்திலிட்டு அப்பிரகத்தை அச்சாற்றில் முத்தினம் ஊறவைத்தெடுத்துப் பிறகு முர்ப்படியே புளித்த கழுநீரிலும் எருக்கின்பூச் சாற்றிலும் மூன்று மூன்று தினம் ஊறவைத்துக் கழுவி யெடுக்கச் சுத்தியாம்.

அப்பிரக நவநீதம் (தான்யாப்பிரகம்) செய்துகொள்வதும் ஒரு வகைச் சுத்தியாம், இம்முறையினைக் கீழ்க்கண்ட செய்யுளினுல் அறியலாம்.

போக்காக வப்பிரக சுத்தி தன்னைப்
பூட்டுகிறே னப்பிரகம் படிதா னென்று
வாக்காகக் கோமயந்தான் படிதான் மூன்று
வகைகண்டு சமனுக விரவி வைத்து
வீக்குவா யிரண்டுபடி நீர்தான் வற்ற
வெந்தபின்பு சுணையுள்ள நெல்லிற் சேர்த்துத்
தாக்கியே கிழிகட்டிப் புளித்தகாடி
தனில்விட்டுக் கசக்கிடவே கரையும் பாரே ”

மற்றும், கிருஷ்ண அப்பிரகத்தை 3 நாள் புளிப்பு மோரில் ஊறவைத்து 4 வது நாள் உரலில் இட்டு மெல்லிய பொடியாய் இடித்து மறுபடி 3 நாள் புளித்த தண்ணீரில் ஊறவைத்து ஒரு சட்டியின் வாய்க்குச் சவுக்கத் துணிகட்டி அதன்மீது பொடியைப் போட்டு அதற்கு அரைப்பங்கு நெல்லையும் அதில் போட்டு நீராகாரம் விட்டுக் கொஞ்சம் கொஞ்மாகப் பிசைந்து வடிகட்டினுல் அப்பிரகப் பொடி சலத்தோடு சேர்ந்து சட்டியி லிறங்கும். பிறகு அதைத்தெளியவைத்து மேலே யிருக்கிற நீரை யூற்றிவிட அடியில் வெண்ணெயைப் போலிருக்கும். இதுவே அப்பிரக நவநீதம்.

தேரன் யமகவெண்பாவில் கூறப்பட்ட சுத்திமுறை கீழ் வருமாறு:—

ஒருபலம் அப்பிரகப் பொடிக்கு எருக்கு சமூலச்சாறு பலம் 5-ம் அரைத்து வஸ்திரகாயம் செய்த செங்கல் கிட்டப்பொடி 1 பலமும் சேர்ந்த 6 பலத்தை விட்டுக் காலை முதல் மாலைவரை வெய்யிலில் வைக்க வேண்டும். இவ்விதம் 10 நாள் தினேதினே செய்யவேண்டும். பிறகு இரண்டு நாள் சாறுவிடாமல் உலர்த்தி மீண்டும் முன்போலவே ஒரு முறை செய்து எருக்கின்சாறு 67 பலம் கிட்டப்பொடி 13 பலம்

சேர்ந்த 80 பலத்தை அப்பிரகத்துக்குச் சேர்த்துச் சட்டிகொண்டு மூடிச் சீலைசெய்து 1 கஜ சதுரக்குழி தோண்டி அதில் ½ கஜ அளவு சாம்பலைக் கொட்டி அதன்மேல் சட்டியை வைத்து அக்குழிநிறையச் சாம்பலைக் கொட்டி மூடிவிடவும். 20 நாள் சென்றபின் எடுக்க அதன் ஆவியால் வெப்பம் மேலேறி அதிக வேகமுள்ளதா யிருக்கும். பிறகு கழுவி எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

பொதுவாக அப்பிரகத்தினால் செய்யப்பட்ட மருந்துகள் துவர்ப்பிச் செய்கையையும், பலகாரிச் செய்கையையும், காமவிர்த்தினிச் செய்கையையும், உடல்தேற்றி செய்கையையும் உடையன. இதன் குணத்தைக் கீழ்க்கண்ட செய்யுளினா லறியலாம்.

> " அப்பிரக மென்றறைந்தால் அண்டமகோதரமும்
> எப்பிரமி யங்களுமுன் னீரிழிவும் — வெப்பூரற்
> பேதமும் போகாமேகப் பித்தமுங்கண் ணோய்களும்பல்
> வாதமும் போந் தாதுவுமா மால்" (ப. கு.)

(பொ – ரை):— பீஜ வாயு, பெருவயிறு, பிரமேகம், அதிமூத்திரம், சுரம், நமைச்சல், மேகப் பைத்தியம் கண்ணோய், வாதரோகங்கள் தீரும்; வீர்யவிர்த்தியை உண்டுபண்ணும். நிற்க, " அப்பிரக பற்பத்தருமை யாரறிவார் செப்பு முன்னே நீர்க்கட்டு தீருமே"என்ற தொடரினால் நீர்க்கட்டுக்குச் சிறந்த தென்பதனையும் அறியலாம். மற்றும், இதன் உபயோகத்தினைப் பற்பசெந்தூர அனுபான பிணிநீக்கத்தின் கீழ் விளக்குவாம்.

கீழ்க்கண்ட பட்டியில் கண்டவாறு அப்பிரகத்தைப் பற்பித்துக் கொள்ளலாம்.

ஒரு பலம் சுத்தித்த அப்பிரகப் பொடிக்கு:

	சாற்றின் அளவு	அரைக்கும் நாள்	வில்லைஉலர்த்தும் நாள்	கவசித்துலர்த்தும் நாள்	புடத்துக் குவரட்டி
கொத்தவரைச்சாறு	6	6	5	1	40
நீலோற்பலச் சாறு	5	5	4	1	36
கட்டுக்கொடியிலைசாறு	4	4	3	1	30
பசுமூங்கில் கிழங்குசாறு	3	3	2	1	27

மேற்கண்டவாறு முடித்த பற்பத்தின் அளவு யாதெனில்: கடலையின் கால்கூறு உத்தமம்; அரை, முக்கால், முழுக்கூறு

முறையே மத்திமம், அதமம், அதமா அதமமாகும். மேற்படி பற்பம் பிரமாத்திரப் பிரயோக மென்றும் காருடப் பிரயோகமென்றும் சிறப்பாகக் கூறப்பட்டிருத்தலைக் கீழ்க்கூறும் பாவாலறிக:

" அப்பிர கப்பொடி யாலேபல னுண்டா
மப்பிர கப்பொடி யாகு மயன்படை
யப்பிரகப்பொடியாங்கருடப்படை
யப்பிர கப்பொடி யாமது சர்வமே" (திருமூலர் திருமந். திரட்டு)

அப்பிரக பற்பத்திற்கு அனுபானமும் பிணிநீக்கமும்:—

மண்ணைப்பூ சம்பீரமா லலங்கல் பானெய் தயிர்
மண்ணைப்பூ சம்பீர மாதறல்கண் — மண்ணைப்பூ
கோவுழையன் பற்றல்விடல் கோலமிக லல்கல்பந்தல்
கோவுழையன் பற்றளவு கோள்.

மண்ணைப்பூசம் — பேய்ப்புடல் சாறு, பீரம் — பேய்ப்பீர்க்கின் சாறு, மாலலங்கல் — துளசிச் சாறு, பால் — பசுவின் பால், நெய் - பசுவின் நெய், தயிர் — பசுவின் தயிர், மண்ணைப்பூ — வெங்காயப்பூச் சாறு, சம்பீரம் — எலுமிச்சம்பழச் சாறு, மாது — தாய்ப்பால், அறல் — குளிர்ந்தநீர், கள் — தென்னங்கள், பனங்கள், ஈச்சங்கள். (மேற்கண்ட அனுபானங்களிலே முறையே கீழ்க்கண்ட நோய்களுக்கு அப்பிரக பற்பத்தைக் கொடுக்கவும்.) மண்ணைப்பூ — கபசந்நி, கோ - வாதசந்நி, உழையன் — பித்தசந்நி, பற்றல் — (1) கபத்தைப்பற்றி வரும் பிணிகள், (2) வாதத்தைப்பற்றி வரும் பிணிகள், (3) பித்தத்தைப்பற்றி வரும் பிணிகள், விடல் — (1) கபத்தைவிட்டுப் பிரிதலினல் உண்டாம் பிணிகள், (2) வாதத்தைவிட்டுப் பிரிதலினல் உண்டாம் பிணிகள், (3) பித்தத்தை விட்டுப் பிரிதலினல் உண்டாம் பிணிகள், கோலமிகல் — நீரிழிவு, அல்கல் — நீர் அருகல், பந்தல் - நீர்க்கட்டு, கோவுழை — கண் வலிப்பு, கண்ணீர் வடிதல், கண்ணெரிச்சல், பீளை சாறல் இவைகளுக்குக் கடைசியாகச் சொன்ன ஈச்சங்கள்ளிலும், அன் - கண்கட்டிப்பரு, வீக்கம், புருவவலிப்பு, அருகல் முதலிய பிணிகளுக்கும் மேற்படி ஈச்சங்கள்ளிலும், பற்று - நேத்திர வாயுப் பல்லைக்கு மேற்படி ஈச்சங்கள்ளுடன் குப்பைமேனிச் சாறு கலந்து அதில் அனுபானித்தும், அளவு — நேத்திர வாயுச் சூலைக்கு மேற்படி கள்ளுடன் நொச்சியிலைச் சாறு கலந்ததிலும், கோள் — நீரொழுகிப் பீளை வடிதலுக்கு மேற்படி கள்ளுடன் கற்றாழைச் சாறு கலந்ததிலும் கொடுக்கத் தீருமென்றவாறு.

மற்றும், மேற்படி அப்பிரகபற்பத்தை விடங்களுக்கு உபயோகிக்கும் வகை:

ஆயிலியங் கார்த்திகை தூயாளூர்தி வண்டெலிநாய்
ஆயிலயங் கார்த்திகை யீயானளுவீ —யாயிலியம்
வெள்ளைக் குஞ்சர்க்கிமணி வெட்பாலை கள்ளிவன்னி
வெள்ளைக் குஞ்சர்ச்கிகைமை மெய்.

ஆயிலியம்-நல்லபாம்பு கடிவிடம், கார்த்திகை-தேள் கடி, தூயாள் ஊர்தி-பூரக்கடி, வண்டு-வண்டுக் கடி, எலி-எலிக் கடி, நாய்-நாய்க் கடி, ஆயிலியங்கு-மூஞ்சூரின் கடி, ஆர்த்தி-நட்டுவக்காலி, கை—மர வட்டை, யீ—நரிக்கடி, யான்-செய்யான் கடி, நளு-அட்டைக் கடி, ஈ—காரீக் கடி, ஆயிலியம்-(மேற்கூறிய கடிகளுக்கு) வரிசைக் கிரமப் படிக்கு அனுபானமாவது: வெள்ளைக்குஞ்சு—வெண்குன்றி சர்வாங்கச் சாறு, அற்கி-வெள்ளெருக்கின் சாறு, மணி-உத்தாமணிச் சமூலச் சாறு, வெட்பாலை-வெட்பாலைப் பட்டைச் சாறு, கள்ளி-இலைக்கள்ளி யிலைச்சாறு, வன்-வன்னிசமூலச்சாறு, நி-மலைவேம்பு இலைச்சாறு வெள்-வெள்ளறுகின் சாறு, ஐக்குஞ்சு-தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு, அற்கி-ஒரிலைத்தாமரைச் சாறு, கை-கரிசாலைச் சாறு, மை-ஆடுதின்னாபாளையிலைச் சாறு, மெய்—குப்பைமேனியிலைச் சாற் றிலும் கொடுக்கத் தீருமென்றவாறு.

நிற்க, எவ்வகைப் பிணிக்கும் பிரதான அனுபானம் துளசிச் சாருகுமென் றுணர்க.

அப்பிரகமும் மருந்தீடும்:—

என்றாதிலே கிருமியென்ன மருந்தீட சத்தி
என்றாதிலே கிருமியேக்கு முன்னே—யென்றாதி
பூரவள்ளி யப்பிரகை பொய்த்தாலி தேமுனகற்
பூரவள்ளி யீயஃதும் போம்"

(போ-ரை):— கோடை வெய்யிலி லகப்பட்டுத் துடிக்கின்ற புழுப்போல தேகம் வெதும்பி நைந்து குடல் ஈரல் தாதுக்கள் முத லியன உண்மை அற்றுப்போகத்தக்கதாய் பரத்தையர் தம் கைவசப் பட்ட ஆடவரை தம்மைவிட்டு நீங்காதிருக்கும்படி செய்கின்ற மருந் திடுதல் இருவகைப்படும். அவை: ஊனினால் ஒரு விதமும் விடச் சரக்கினால் ஒரு விதமுமாகும். ஊனினால் செய்யப்படும் மருந்தில் பேய்நாய், பேய்நரி, பச்சைப்பாம்பு இவைகளின் நெய், நிலம்புரண்டி அழுகண்ணி தொழுகண்ணி, தம் குறியங்கங்களில் உண்டாம் மலினநீர் இவைபோன்ற வைகளையும், விடச்சரக்கினால் செய்யப்படும் மருந் தில் வெள்ளைப்பாடாணம், மயில்துத்தம், மெழுகு, பாவிரிவேர், குறி களில் உண்டாம் மலினநீர் இவைபோன்ற வைகளையும் சேர்க்கின்றனர். இம்மருந்தைப் பழகவைத்து ஆடவர்களுக்கு உணவாதிகளிலும் தாம் பூலத்திலும் அவர்களுக்குத் தெரியாது பரத்தையர் கலந்து கொடுத்து

விடுகின்றனர். சிலநாள் கழிந்தவுடன் அம்மருந்து உடலைப்பற்றி குடலையும் ஈரலையும் சேர்ந்துவிடுகின்றது. வயிறும் குடலும் ஊறி விம்மிப் பருமனாக உப்பிமேல்சுவாசத்துடன் வலியையும் அதிகப் படுத்துகின்றது. நாட் செல்லச்செல்ல கபம் அதிகரித்துக் கண்டத்தில் எப்பொழுதும் கோழிக்குஞ்சு, கின்னரம், கிழநரி சப்தமொப்ப ஒருவித சப்தமும், விக்கலும், இருமலும், வாய்நீர் பெருகலும் அரோசகம், ஓக்காளம், உணவு வேண்டாமை, பலக்குறைவு, இளைத்தல் முதலிய துன்பங்களும் உண்டாகி உயிருக்கும் ஆபத்தையுண்டுபண்ணும். இத்தகைய மருந்தீட்டினால் உண்டாம் தீங்கை நீக்குமுபாயம் யாதெனில்: நன்றாக முடிந்த*அப்பிரக பற்பத்தைக் கர்ப்பூரவள்ளி இலைச்சாற்றிலே அனுபானித்துக் கொடுத்தலென்பதாம். மற்றும், சுத்தியின்கீழ்க் கூறியவாறு அப்பிரகம் சுத்தியாகாவிடினும் நன்றாக முடியாவிடினும் மருந்தீட்டின் குறிகுணங்களைக் காட்டும். அத்தீங்கை நீக்க வயிரத்தை யறுக்க வயிரத்தையே ஆயுதமாக உபயோகிப்பதுபோல செம்மையாய் சுத்தித்து நன்றாக முடிந்த அப்பிரக பற்பத்தை கர்ப்பூரவள்ளிச் சாற்றில் கொடுக்கத் தீரும் என்றவாறு.

அப்பிரக பற்பத்தை ஒரு மண்டலம் வரைக்கும் புளி, புகையிலை, பெண்போகம், கடுகு, மதுபானம், அகத்திக்கீரை இவைகளை நீக்கிச் சாப்பிட வேண்டும். பத்தியத்திற்கு எது கூட்டினாலுங் கூட்டலாம். பெண்போகம் கூட்டினால் மரணத்தை உண்டாக்கு மென்றும் கூறப்பட்டுள்ளது.

அப்பிரக செந்தூரம்

ஒரு பலம் சுத்தித்த அப்பிரகப் பொடிக்கு:

	சாற்றின் அளவு	அரைக்கும் நாள்	வில்லையுலர்த்தும்நாள்	கவசித்துலர்த்துநாள்	புடத்து விரட்டி
கொம்புப்பாகல்இலைசாறு	4	4	3	1	30

இவ்வாறே மீண்டும் மும்முறை செய்யவும்.

பழச்சாறு	7	7	6	1	30

இவ்வாறே மீண்டும் அறுமுறை செய்யவும்.

அளவு நாளளவு பற்பத்தின்கீழ்க் காண்க. அப்பிரகசெந்தூ

* இவ்விதி சித்தர் நூலில் சிறப்பா யுள்ளது.

ரத்தின் அனுபானமும் பிணிநீக்கமும் கீழ்ச் செய்யுளாலறியலாம்.

வீசவளிக் காமலகை வெப்புக்கற லனற்கால்
வீசவளிக் காமலேக்கு வெம்புனலே — வீசவளி
யைக்கிழுது வெப்பிற் கமுது சனிக்காவாரை
யைக்கிழுது மெய்க்கயினி யாம்.

(ப—ரை):- வீசவளிக்காமலகை - அண்டவாயுவிற்கு நெல்லிச் சாற்றிலும், வெப்புக்கறல் - சுரத்திற்குத் தண்ணீரிலும், அனற்கு ஆல் - காரகத்திற்கு கையாந்தகரைச் சாற்றிலும், வீசவளிக்குஆம் – பதினைந்துபங்கு பித்தசன்னி மிருந்து 1 பங்கு வாயுவிருக்கிற வியாதிக்கு வெந்நீரிலும், மலேக்கு வெம்புனலே - பிடிப்பு வாயுவிற்கு உத்தாமணிச் சாற்றினும், வீசவளி - காக்கைவலிக்கு பருத்திச் சாற்றிலும், ஐக்கு இழுது- இருமலுக்கு நெய்யிலும், வெப்பிற்கு அமுது - தாபசுரத்திற்கு பாலிலும், சனிக்கு ஆவாரை - சந்நிக்கு ஆவாரைச் சாற்றிலும், ஐக்கு இழுது - கபசன்னிக்குத் தேனிலும், மெய்க்கயினியாம் – மேனிக்குட்ட ரோகப்பிணிக்கு நீராகாரத்திலேயும் பொசிக்கத் தீருமென்றவாறு.

இச்செந்தூரம் மேகநீரையழித்துச் சரீரத்தை அழிவின்றிச் செய்யும் என்றும் கூறப்பட்டுள்ளது.

வேறு முறைகள்:—

சுத்தித்த அப்பிரக நவநீதம் 1 பலம் எடுத்து ஒரு பீங்கான் கோப்பையில் சேர்த்து நவநீதம் நன்ருய் ஊறும்படி 3 நாள்வரைக்கும் காட்டுச் சாமந்திச் சாறுவிட்டு வந்து நான்காம் நாள் தொடங்கி இச் சாறுவிட்டே மயனம்போலாகுமட்டு மரைத்து இலேசாகச் சிறு பில்லை கள் செய்து நிழலில் மூன்று நாள் உலர்த்திப் பிறகு வெயிலில் நன்ருய்க் காயவைத்துச் சில்லிட்டுச் சிலேசெய்துலர்த்தி 50 எருவில் புடமிடவும். இவ்வாறே எழுபுட மிட்டெடுக்கச் செந்தூரமாகும். இச் செந்தூரம் மேகநீருக்கும் அதிமூத்திரத்திற்கும் நல்ல பலன் தரும்.

வேறு

சுத்தித்த அப்பிரக நவநீதம் 10 பங்குக்குச் சுத்திசெய்த கந்தகம் 1 பங்கு சேர்த்து (1) எலுமிச்சம் பழச்சாறு விட்டு மைபோலரைத்து மிக்க இலேசான காசளவு சிறு பில்லேகள் செய்து வெயிலில் நன்ருய் உலர்ந்தபிறகு புடமிட்டு எடுத்துத் தேறிய எடைக்குப்பத்தில் 1 பாகம் சுத்திசெய்த கந்தகம் கூட்டி (2) கரிசாலேச் சாற்றில் மேற்படியாகவே யரைத்துமேற்கண்டபடியே புடமிட்டெடுத்து(3) முன்போலத் தேறிய எடைக்குப்பத்தில் 1பங்கு கந்தி சேர்த்து மேற்படியாகவே சிறுசெறுப் படைச் சாற்றில் ஒரு புடமும், மேற்படியாகவே (4) முருங்கைப்பூ ரசத்தில் ஒரு புடமும், (5) பொடுதலேச் சாற்றில் ஒரு புடமும் செய்யச் செந்தூரமாகும். உட்கொள்ளும் அளவு கால் முதல் ஒரு பணவெடைவரை.

சோர்ணப்பிரகச் செந்தூரம்

அப்பிரகச் செந்தூரம்	பலம்	½
பவழ பற்பம் ...	,,	½
குந்தன தங்கத்தகடு ...	,,	¼
ரசப்பதங்கம் ...	,,	½
அயக்காந்தச் செந்தூரம் ...	,,	½
கருவங்கச் செந்தூரம் ...	,,	⅛

இச் சரக்குகளைக் கல்வத்திட்டு கற்றாழைச்சாறு விட்டு தங்கத்தின் மின்னல் மறைகிறவரைக்கும் அரைத்து பில்லை செய்துலர்த்தி சில்லிட்டு மூன்று மண்சிலை செய்து உலர்த்தி 20 வரட்டியில் புடமிட்டு ஆரியபின் எடுக்கவும். பிறகு பில்லை எடைக்கு ½ எடை சுத்தித்த கந்தியும் கந்தியெடைக்குப்பாதி லிங்கமும் சேர்த்து கல்வத்திட்டுக் கற்றாழைச் சாற்றால் நன்றாய் அரைத்து பில்லைசெய்து உலர்த்தி முன் போல் 20 வரட்டியில் புடமிடவும். இவ்வாறு மேலும் 7 புடமிடவும்; செந்தூரமாகும். அனுபானம்: சிந்திலாதி லேகியம். இம்மருந்து மேகநீரிழிவு இருபத்தொன்றுக்கும் சிறந்தது.

குறிப்பு :—பற்பத்திலேனும் செந்தூரத்திலேனும் தளுக்கு (சந்திரிகை) இருக்கக் கூடாது. நீரின்மீது மிதக்கத்தகுந்த லேசத்துவம் அடையவேண்டும். இக்குணங்களைப் பெறாத பற்பச்செந்தூரங்கள் இடு மருந்தாலுண்டாகும் நோய்களை விளைவிக்கும். மேற்கூறிய நன்மைகளைப் பயக்காது. இதில் சேர்க்கவேண்டிய பற்ப செந்தூரங்களின் முறைகளை அகத்தியர் பின் எண்பதில் காண்க.

அவ்வாறு உண்டாய தீங்கிற்கு காந்தட் கிழங்கையும் சுக்கையும் முறைப்படிக் குடிநீர் செய்து அருந்தவறும். ஈதன்றி வெற்றிலைச்சாறும் இஞ்சிச்சாறும் சமவளவாய்க் கலந்து இருவேளை அத்தீங்கு நீங்கு மட்டும் அரை ஆழாக்கு விதம் அருந்தவும்.

பக்கசூலையும் விஷ்ணுசக்கரமும்

Dr. C. N. குப்புசாமி முதலியார், H. P. I. M.

இந்த வியாசத்தில் "விஷ்ணு சக்கரம்" என்ற மருந்தின் செய்முறையும் அதன் உபயோகங்களில் முக்கியமாகப் பக்கசூலையில் அது

தரும் குணங்களையும் பற்றிக் கூறப்படும். விஷ்ணுசக்கரம் என்பது ஒரு மாத்திரையாகும். மஹாவிஷ்ணுவின் சக்கரமானது எப்படி எதிரிகளை வேகமாகவும் நிச்சயமாகவும் சங்கரிக்கும் வன்மை வாய்ந் துள்ளதோ அதேபோல் இம்மருந்தும் உரிய பிணிக் கூட்டங்களைக் கலைத்து வோட்டும் சக்தி படைத்தது என்பதே இதன் பெயரின் உட் போந்த கருத்தாகும். இனி இம்மருந்தில் சேரும் சரக்குகளும், செய் முறையும் தீரும் நோய்களும் இதனடியில் காணும் செய்யுளால் தெரிந்துகொள்ளலாம்.

ஆதிவிந்து சாதிலிங்க மானசத்தி நாபியும்
சோகிதுத்த தாரமுந்துலங்கு காந்தமுஞ் சிலை
நீதிநிம்பச் சாறுவிட்டு நேரக்குன்றி நேரெடை
பாதிமேனி யாயிருந்து பாரளந்தோன் சக்கரம்.

சக்கரத்தி லோர்மணி தனித்திரி கடுகுடன்
மிக்கதேனு மிஞ்சிநீரும் விட்டுநீயு ரைத்திட
பக்கவாதம் மிக்கசூலை பத்துமூன்று சந்நியும்
தக்கவேப்ப மிக்கமூர்ச்சை சகலவாயுந் தீருமே.

இதன் பொருள் :— இரசம், இலிங்கம், கந்தகம், நாபி, பலகரை, துத்தம், தாளகம், காந்தம், மனோசிலை தனித்தனி சுத்தித்த சரக் குகள் ஒன்பதும் சமனெடையாக எடுத்துக் கூட்டி பழச்சாறு விட் டரைத்துக் குன்றியளவாக மாத்திரைசெய்து கொள்ளவும். இதுவே விஷ்ணுசக்கர மாத்திரையாகும். இதில் ஒரு மாத்திரை யெடுத்து தேனும் இஞ்சிச்சாறும் கலந்து அதில் உரைத்து திரிகடுகுச் சூரணம் சேர்த்துக் கொடுக்கவும். இதனால், பக்கவாதம், சூலை, சந்நி பதின் மூன்று, ஏப்பம், மூர்ச்சை, வாயு ஆன பலவும் தீரும்.

குறிப்பு :— இதன் அரைப்புச் சாற்றில் இருவித அபிப்பிரா யங்கள் உள்ளன. ஒரு சாரார் பழச்சாறு என்றும், மற்றொரு சாரார் வேப்பம்பழச்சாறு என்றும் கூறுகிறார்கள். இதில் வேப்பம்பழச் சாறே அநேகர் ஒப்புக்கொள்வதாகும். வேப்பம்பழம் சில குறித்த காலங்களி லேயே கிடைப்பதால் பதிலுக்குப் பழச்சாறுவிட்டு அரைப்பவர்களும் உளர். எனது சொந்த வைத்திய அனுபவத்தில் நான் வேப்பம்பழச் சாறுவிட்டரைத்துச் செய்யப்படும் மருந்து, பழச்சாற்று லரைத்துச் செய்யப்படும் மருந்திற்கு மிகவும் உயர்ந்தது என்று கண்டிருக்கிறேன்.

இனி இம்மருந்தின் உபயோகத்தில் கண்ட பக்கவாதம் என்ற வார்த்தைக்கும் பொருட்பேதம் கொள்ளப்படுகிறது. சிலர் பக்க வாதம் என்பது பக்ஷவாதம் (Hemiplegia) எனும் நோயையே குறிக்கும் என்கிறார்கள். மற்றப்படி பக்கவாதம் என்பது பக்கத்தில் (Flanks) வாதக் கோளாறால் ஏற்படும் சூலை (பக்கசூலையை) உணர்த்தும் என்று கொள்ளப்படுகிறது. அரசாங்க இந்திய மருத்துவக் கலாசாலை ஆஸ்பத்திரியில் பிந்திய கொள்கை ஏற்றுக்கொண்டு இந்த மருந்தை உபயோகித்து நல்ல பலனை அடைந்திருக்கிறோம். ஆதலால், இனி பக்கசூலையின் வரலாற்றைச் சிறிது ஆராய்தல் அவசியமாகும். பித்த வாயுவினால் பீடிக்கப்பட்ட உடம்பில் ஆகாராதி விகற்பங்கள் ஏற்பட அபான உதான வாயுக்கள் தங்கள் மார்க்கங்களிலிருந்து விலகி கீழ்க் கண்ட குணங்களை உண்டுபண்ணும். அவை: மலபந்தம், மூச்சுத் திணரல், பேச்சுக் கஷ்டப்படல், மார்பிலுள்ள அவயவங்களில் நோயை யுண்டுபண்ணல் முதலியனவாம். இவ்வாறு உண்டான இந்நோயில் நாடி எப்பொழுதும் வாதகபமாகக் காணப்படும். இதைக் கீழ்க்கண்ட செய்யுளால் அறியலாம்:

இருக்கும் அந்த வாதத்தில் சிதஞ்சேர்ந்தால்
இளைப்பிருமல் விஷசன்னி தோஷம் வீக்கம்
இருக்கின்ற குளிர்காய்ச்சல் விரண தோஷம்
வாந்தி பொருத்திரு மூளைவு மயக்கம் சோர்வு
ஒருக்கின்ற மலபந்தம் பொருமல் வீக்கம்
உள்வீச்சு சூலையொடு பாண்டு ரோகம்
தருக்கின்ற தனுர்வாதம் பக்கவாதம்
சார்ந்து வெகுபிணி பலவும் தழைக்குந் தானே.

வாதகப தோஷங்கள் கெடுதலடைவதோடு தாதுக்களில் முக்கியமாக ரசதாதுவும் ரத்த தாதுவும் கெடுதலடையும்.

இனி இந்நோயில் காணும் முக்கிய குறிகுணங்களைக் கவனிப்போமாயின் அவை வருமாறு:—

சுரம், மூச்சு விடுவதில் கஷ்டம், தலைவலி, உடம்பு பளுவாயிருத்தல், திமிர், விலாப்பக்கத்தில் குத்துவது போன்றும் இழுப்பது போன்றும் வேதனை, அத்துடன் வீக்கம், சில சமயம் விரையில் நோவு தோன்றுதல், கைகால் மரத்தல், பார்வை மந்தம் முதலிய குணங்களாகும். இதைக் கீழ்க்காணும் செய்யுளால் அறியலாம்.

தியக்கான பக்கமாஞ் சூலை கேளாய்
திருகியே அண்டத்தில் பொருமி நொந்து
உயக்கான சுரந்தோன்றி வலித்து நொந்து
உடம்பு புண்போல் உளைந்துதலை வலியுமாகி
பயக்கான பக்கத்தில் குத்துண்டாய்
ப்ரரித்துக் கனத்து மிக்கத் திமிருண்டாய்
கயக்கான கைகாலும் ஓச்சலாகி
கண்புகைந்து கருமாறி பாச்சலாமே.

இனி இந்நோயை மற்றும் இதேபோல் விளங்கும் சில நோய்களுடன் மயங்காமல் தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியம். அவற்றில் சிலவற்றைக் குறிப்பாம்: 1. கபசன்னிபாதம் - இதிலும் மார்புநோய், தலைவலி இவை இருக்குமாயினும் சுரம் அதிகமாக இருப்பதுடன் நடுக்கல், பிரமை, அறிவுமயங்கல் முதலிய குணங்களும் இருப்பதால் எளிதில் அறிந்துகொள்ளலாம். 2. வலிகுன்மம் - இதில் வலி முக்கியமாக வயிற்றுப்பாகத்தில் இருக்கும். கட்டியிருப்பது போன்ற உணர்ச்சி தெரியும். அத்துடன் பொருமல் முதலிய வயிற்றைப்பற்றிய குணங்களும் இருக்கும். 3. மார்புநோய் (தமரக வாயு) இந்நோயில் மயக்கமிருக்கும். வலி மார்பின்மையத்தில் வாளால் அறுப்பதுபோல இருக்கும். விலாப்பக்கங்களில் வலி அதிகமிராது. இதனல் இவ்வியாதிகளைத் தெரிந்துகொண்டு விலக்கிவிடக்கூடும்.

இனி பக்கசூலையில் நாம் அனுசரிக்க வேண்டிய சிகிச்சை முறையைக் கவனிப்போம். முதலாவது அபான உதான வாயுக்களோடு விகற்பப்பட்ட வாத தோஷத்தைச் சரிப்படுத்த வேண்டும். அவ்விதம் செய்யும்போது கபதோஷம் அதிகரிக்காவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு 1. எண்ணெய் பேதிகளை விலக்க வேண்டும். 2. கபத்தை உள்மருந்து புறமருந்துகளால் வெளிப்படுத்தவும் சமனப்படுத்தவும் செய்தல் வேண்டும். 3. விகற்பப்பட்ட அபான உதான வாயுக்களைப் பசித்தூண்டி செய்கை, செரிப்புண்டாக்கிச் செய்கை உள்ள மருந்துகளைக் கொண்டு சரிப்படுத்த வேண்டும். 4. கடைசியில் இவ்வாறு சமனப்படுத்திய தோஷங்கள் தத்தம் நிலையில் நிற்கவும் உடற்றுக்களை வலுக்கச் செய்யவும் உடலுரமாக்கிச் செய்கையுள்ள மருந்துகளைக் கொடுக்கவேண்டும்.

இந்நோயில் உபயோகிப்பதற்கான சில பேதி மருந்துகள் :—

1 அகஸ்தியர் குழம்பு ½ - 1 குன்றி - தண்ணீருடன்.
2. கௌசிகர் குழம்பு ½ - 1 ,, பனைவெல்லத்துடன்.
3. மேகனாதக் குளிகை 2 - 3 மாத்திரைகள், குளிர்ந்த நீருடன்.
4. கோடசூரி மாத்திரை 1 - 2 ,, இஞ்சிச்சாறுடன்.
5. இலவங்காதி மாத்திரை 3 - 4 மாத்திரைகள் நீருடன்.

உள் மருந்துகள். (மாத்திரைகள்)

1. வசந்த குசுமாகர மாத்திரை, 1 தேனுடன் தினம் இருவேளை.
2. பிரமானந்த பைரவ மாத்திரை 1 இஞ்சிச்சாறுடன் ,,
3. ராஜராஜேஸ்வர ,, 1 வேம்புக்குடிநீருடன் ,,
4. விஷ்ணுசக்கர ,, 1 தேன் இஞ்சிச்சாறுடன் ,,
5. பூர்ணச்சந்திரோதயம் ,, 1 தேனுடன் ,,

பற்பங்கள்.

1. இரசபற்பம் ½ குன்றி, முலைப்பாலுடன்.
2. தாளகபற்பம் ½ ,, தேனுடன்.
3. தங்கபற்பம். ½ ,, ,,
4. பிரவாளபற்பம் ½ ,, பாலுடன்.
5. முத்துபற்பம் ½ ,, ,,

மெழுகுகள்.

1. நந்திமை.
2. பஞ்சசூத மெழுகு.
3. வான மெழுகு.

செந்தூரங்கள்.

1. அயச்செந்தூரம் ½ - 1 குன்றி தேனுடன்.
2. காந்தச் செந்தூரம் ,, ,, ,,
3. தாளகச்செந்தூரம் ,, ,, ,,
4. இலிங்கச்செந்தூரம் ,, ,, ,,
5. வெள்ளிச்செந்தூரம்,, ,, ,,

சுன்னங்கள்.

1. இரசச்சுன்னம் ¼ முதல் ½ குன்றி, முலைப்பாலுடன்.
2. வெ. பாஷாண சுன்னம் ¼ முதல் ½ குன்றி, குளிர்ந்த நீருடன்

வெளிமருந்துகள்.

1. மிளகாய்ப் பற்று.
2. விஷமுஷ்டித் தைலம் - பூசி ஒற்றிடமிடவும்.
3. வாதகேசரி தைலம் - ,,

குடிநீர்கள்.

1. வில்வவேர் 1, சிற்றாமுட்டி 3, சுக்கு 3 கழஞ்சுகள் வீதமும், நீர் 4 ஆழாக்கும் சேர்த்து ஒரு ஆழாக்காக வற்றவத்து உபயோகிக்கவும்.

2. ஆடாதோடை, சிற்றரத்தை, தாளிசபத்திரி, திப்பிலி - சம பாகம் சேர்த்து ½ படி தண்ணீர் விட்டு ஆழாக்காக வற்றவைத்து இரண்டு நேரத்துக்கு உபயோகிக்கவும்.

உணவு.

நோயின் ஆரம்ப காலத்தில் சுரம் இருக்கும்போது பால், முடிக் கஞ்சி,புனர்பாகம் முதலிய திரவ உணவுகளை உபயோகிக்க வேண்டும். சுரம் இறங்கியபின் புழுங்கலரிசி சாதம் உபயோகிக்கலாம். அத்துடன் கத்தரிப்பிஞ்சு, அவரைப் பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு இவைகள் சேர்ந்த கறிகளும் காடை, கவுதாரி இவைகளின் சூப்புகளும் சேர்த்துக் கொள்ளலாம். கீரை வகைகளில் தூதுவளை, கரிசாலை, பொன்னாங் காணி, முக்காவேளை, நல்வேளை முதலியவற்றைக் கூட்டலாம்.

இனி மேற்கூறப்பட்ட மருந்துகளெல்லாம் பக்கசூலைக்குக் கொடுக்கக்கூடியவை என்று ஏற்பட்டிருந்தாலும் அரசாங்க இந்திய மருத்துவக் கலாசாலை ஆஸ்பத்திரியில் பக்கசூலை யென்று நிதானிக் கப்பட்ட இருபத்தைந்து நோயாளிகளுக்கு விஷ்ணுசக்கரத்தை முதன் மையாகக் கொண்டு சிகிச்சை செய்ததில் ஏற்பட்ட பலனைத் தருகி றேன். இவர்கள் 1934 ம் வருஷத்திலிருந்து 1941ம் வருஷத் திற்குள் சிகிச்சைக்கு வந்தவர்கள். ஆங்கில வைத்திய முறைப்படி இவர்களில் பதினைந்து பேருக்கு Pleurisy with effusion என்றும், மூன்று பேருக்கு Dry pleurisy என்றும், இரண்டு பேருக்கு Pleu -ro broncho Pneumonia என்றும், ஒன்று lung abscess என்றும், ஒன்று Hydrothorax என்றும் நிதானிக்கப்பட்டது. இது X.ray முதலிய உபகரணங்களை உபயோகித்துச்செய்யப்பட்டதாகும். இவர்களில் பத்துப்பேர் பூரண குணமாக்கப்பட்டார்கள். எட்டுப் பேர் தற்போதைய குணமடைந்தார்கள். ஆறுபேர் வேறுகாரணங்களுக்

காக வீடு சென்றார்கள். ஒருவர் இறந்தார். பூரணகுணமடைந்த வர்களில் பெரும்பாலோர் Pleurisy with effusion என்ற நோயால் பீடிக்கப்பட்டவர்களாம்.

பெண் மலடு

கோ. துரைராஜன்.

எல்லாச் செல்வங்களிலும் மேலானது புத்திரச் செல்வமே. இச்செல்வத்தைப் பெறாதவர்கள் இல்லத்தில் உணவும் கொள்ளக் கூடா தென்பது நம்மனோர் கொள்கையாகும். மற்றும் குழந் தைகளில்லாதவர்கள் நரகத்தை யடைவதாகவும் கூறப்படுகிறது. ஆகையால் ஒவ்வொருவரும் குழந்தையைப் பெற விரும்புகிறார்கள். ஆனால், சிலருக்குக் கருவே ஏற்படாமல் போகிறது. சிலருக்குக் கரு ஏற்படினும் பூரணமாய் வளராது மத்தியில் அழிந்து விடு கிறது. மற்றும் சிலருக்கு மரித்துப் பிறக்கின்றன. இப்படியாக விவாக நிலைமைக்குட் பட்டும் குழந்தைகளில்லா திருப்பதை மலடு என்கிறோம். இது ஆண்மலடு, பெண்மலடு என இருவகைப்படும். இங்கு நாம் பெண்மலட்டைப் பற்றிப் பல நூல்களிலிருந்து திரட் டிய விஷயங்களை எடுத்துக் கூறுவோம்.

"இசைந்த தொரு பெண்மலடு எங்குமில்லை......" என்று அகத்தியர் கர்ப்பக்கோளில் கூறியிருக்கிறார். பிரமமுனியும் மலட் டிற்குச் சிகிச்சையைக் கூறுமிடத்து,

> "போற்றரிய மலடியுமே பெறுவாள் பிள்ளை
> பெண்மலடோ உலகத்திலில்லை காணே"

என எழுதியுள்ளார். இவ்வாறாகப் பெண்மலடு "எங்கு மில்லை," "உலகத்திலில்லை" என்று சொல்வதனால் பெண்களுக்கு நாத உற் பத்தி அற்றுப்போவதில்லை யென்றும், தக்க பரிகாரங்கள் செய்ய மலடு நீங்கிக் கருத்தரித்து, குழந்தைகளுண்டாகும் என அறியக் கிடக்கிறது. மற்றும் "ஆண்மலடே யாகுமல்லால் பெண்மலடு யாருமில்லை" என அகத்தியர் வேறோரிடத்தில் கூறி இருப்பதினால், ஆண்களே மலடாவார்கள், பெண்கள் மலடாகார்கள் எனத் தோன்று கிறது. ஆண்களுக்கு விந்து உற்பத்தி முற்றும் அற்றுப்போய் சிகிச்சைக்கு உட்படாததினால் தான் "ஆண் மலடேயாகும்" என்

றும், நாத உற்பத்தி முற்றும் அற்றுப் போகாது, சிகிச்சைக்கு வசப் படுவதால் தான் "பெண் மலடு யாருமில்லை" என்றும் கூறினு ரென்று ஊகிக்கலாம். இதைப்பற்றித் தற்கால நிபுணர்கள் * கூறி யுள்ளதை இங்குக் கவனிப்போம். வைட்டமின் (Vitamin) E எனும் தாது சற்றுமில்லாவிட்டால் எலிகள் ஆண், பெண் யாவும் மலடாகின்றன. இங்ஙனம் மலடான பிறகு அத்தாதுவைச் சிறிது புகட்டப் பெண் எலிகள் கருத்தரித்து நல்ல குட்டிகளைப் போடுகின் றன. ஆனால் ஆண் எலிகளோ அத்தாதுவை எவ்வளவுதான் உட் கொண்டாலும் அவைகளின் மலடு நீங்குவதில்லை. இதனால் ஆண் எலிகளின் விந்து உற்பத்தி முற்றும் அழிந்துவிடுகிற தென்றும், பெண் எலிகளின் நாத உற்பத்தி முற்றும் அழிவதில்லை என்றும் உணரப்படுகிறது. இவ்வுண்மை மனிதவர்க்கத்திற்கும் பொருந் துமா? என்பது தான் இதுகாறும் மெய்ப்பிக்கப் படவில்லை. இஃது எங்ஙன மிருப்பினும், பெண்மலடு பரிகாரங்களினுல் நீக்கப் படுவதி னுல் தான் "பெண்மலடு எங்கு மில்லை" "உலகத்திலில்லை" "யாரு மில்லை" என்று கூறுகின்றன ரென்று தெளிவாகத் தெரிகிறது. இனி பெண் மலடாவதற்குரிய காரணங்களைக் கூறுவோம்.

---

* "In the female rat lacking vitamin E all seems to go well until a fairly late stage in pregnancy. Then the young which she is carrying all die, and are resorbed by the maternal organism. The effect is quite distinctive, and may be described as "resorption gestation." Now give the female some vitamin E, and she will be cured: her next pregnancy will be perfectly normal and successful. In otherwords this form of female sterlity is curable.

In the male rat, on the contrary, the sterility is permanent and incurable. The male germ cells degenerate and cannot be renewed. . . . .
Vitamin E deficiency has as yet been fully studied only in the rat and the mouse, and other species still await investi. gation."

Vitamins.
L. J. HARRIS.

இசைந்ததொரு பெண்மலடு எங்கு மில்லை
எதனாலே மலடான சேதி கேளு
அசைந்திருக்கும் பேயாலும் பித்தத்தாலும்
அடிவயிறு நொந்து வரும் வாயுவாலும்
பிசைந்துகர்ப்பப் புழுவாலும் கிரகத் தாலும்
பிணியாலு மேகவை சூரி யாலும்
துசங்கெட்ட கலவியினாற் பூவொ துங்கித்
துலங்காமற் பிள்ளையில்லை சொல்லக்கேளே.

அதாவது (1) பேயாலும், (2) பித்தத்தாலும், (3) அடிவயிறு நொந்துவரும் (கர்ப்ப) வாயுவாலும், (4) கர்ப்பப் புழுவாலும், (5) கிரகத்தாலும், (6) கருக்குழியின் பிணிகளாலும் (7) மேகத்தாலும், (8) வைசூரியாலும் (9) பூ ஒதுங்குதலாலும் பெண்களுக்கு மலடு உண்டாகுமாம்.

(1) பேய் பிடித்திருந்தால் நாதத்துடன் விந்து சேராது, விரோதப்படும். "பேயாலும் பிதிராலும் பிழைதானுண்டு" என்றும், "தேவதை" யாலென்றும் கர்ப்பக்கோள் என்னும் நூலில் அகத்தியர் கூறுவதால், தெய்வங்களின் குற்றங்களினாலும் மலடு உண்டாகலாம். அப்போது கரு அழியும்.

(2) பித்தம் அதாவது பைத்தியம் பிடித்தால் பெண்கள் இல் வாழ்க்கைக்கு உபயோகப் படமாட்டார்கள். ஒருக்கால் உபயோகப் படினும், விந்து அழியும், கர்ப்ப மேற்படாது.

(3) கர்ப்பவாயுவால் வயிறு நொந்து வெளிப்படும் சூதகம் இயற்கைத் தன்மையில் மாறுபடும். அப்போது நாதமும், விந்துவும் கூடி வளர ஏது வில்லாமல் போகிறது.

4. கர்ப்பப்புழு அல்லது மலட்டுப்புழு இருக்குமாயின் அது விந்துவைத்தின்று விடும். ஆகையால் கருவுண்டாக இடமில்லை. திருமூலர் கூறியுள்ள புழுமலட்டு ரோகத்தைப்பின் கூறுவோம். அதைக்காணவும்.

5. கிரகத்தாலும் என்று சொன்னதால் * பிறந்த காலத்தும் பூப்படைந்த காலத்தும் கிரகங்கள் நின்ற நிலைக்கேற்பச் சிலருக்குக் கருவே தரியாது; சிலருக்கு ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளுக்கு மேல் உண்டாகாது. சிலருக்கு அதிகம் உண்டாகலாம். சோதிட நூலில் விரிவாகக் காணலாம்.

---

* இரிமலடாகும் வாறு ஜென்ம நாட்டோஷத்தாலும்
உறுதிருப் பூத்த நாளா லொளிர்தெய்வ விரோதத்தாலும்
செறியுமுத் தோஷத்தாலுஞ் சிலேட்டுமே மிகுதியாலும்
மறுவுற மலடா மென்றுமாதவ னருளிச் செய்தான், பரராச சேகரம்.

6. முத்தோஷ விகற்பத்தினலே கருக்குழியில் தோன்றும் பிணிகளில் முக்கியமானது சூலையாகும்.

"......நேரப்பா தவமிருந்தும் பொருளை யீந்தும்
நேராக இல்லையது சூலையாலே
வேரப்பா தேவதையோ டேழாங் கர்ப்பம்
விரித்துநன்ருய்ப் புகலுகிறேன் விரும்பிக் கேளே."

அகத்தியர் கர்ப்பகோளம்.

அஃது ஆறு வகைப்படும். அவைகளாவன :—

(1) கருக்குழியின் உட்புறம் பாசிபற்றி யிருத்தல்

(2) கருப்பையில் வாயு சேர்ந்திருத்தல்

(3) கருக்குழியில் தசை வளர்ந்து யோனியைச் சுருக்கி மூடியிருத்தல்

(4) கருக்குழியில் கிருமி நிறைந்திருத்தல்

(5) இரத்தக்கட்டி தோன்றி கருக்குழியை மூடி மறைத்திருத்தல்

(6) கருப்பை மதர்த்து (கொழுத்து) இருத்தல்
அவற்றைப் பின்வரும் மேற் கொள்களாலறிக

புகலுகிறேன் முதல் தரந்தான் மலடியென்ற
பூவைக்கு கருக்குழிதான் விளக்க மற்று
அகலுகிறேன் அகலாமல் பாசி பற்றி
அடைத்திருந்தால் விந்தங்கே யணுகா தப்பா
நிகலுகிறேன் மறுதரந்தான் கருக்குழியில் வாயு
நிறைந்திருந்தால் விந்துவங்கே நேரா தப்பா
தகலுகிறேன் பின்னுமங்குக் கருக்குழியில் மூடித்
தசைவளர்ந்தால் விந்துவங்கே தான்செல் லாதே.

செல்லாது நாலாவ தப்பா கேளு
சிறியவள் கருக்குழியில் புழுத் தான் சேரில்

செல்லாது ஐந்தாவ தப்பா கேளு
செறிந்தங்கே கருக்குழியில் சோரி கட்டி

செல்லாது ஆருவ தப்பா கேளு
செப்புகிறேன் கருக்குழி தான் மதர்த்திருந்தால்
செல்லாது இவை ஆறு வியாதி யாகுஞ்
சென்றபின் விரோதமே மூாகுங்காணே"

அகத்தியர் கர்ப்ப கோள்.

(7) மேகத்தால் கிரந்தி வளருமென்றும், கிரந்தியால் விரணமும்; சிமேகமும் வாயு சூலையும் காணுமென்றும் பின் மூன்றினுலும் பலபல மேகங்கள் காணும் மென்று அகத்தியர் காவியத்திலும் திருமூலர் கருக்கடையிலும் கூறியிருக்கிறுர்கள். இவ்விதமாகப் பிறந்த பற்பல நோய்களினுல் கருச்சிதைவு உண்டாகி மலடாகக்கூடும். "கருவழிக்குங் கிரந்தி சூலை" என்று அகத்தியர் வல்லாதியில் கூறியிருப்பதைக் காண்க.

(8) கரும்பனிச்சை என்னும் வைசூரி பெண்ணுக்கு வரின் கர்ப்பத்தையழியப் பண்ணும், ஆணுக்கு வரின் விந்துவைக் கொல்லும்; ஆகையால் அவர்களுக்குப் பிள்ளை யில்லை என்று கீழ்க்காணும் அடிகளாலறிக.

"......திறமான கரும்பனிச்சை விந்தைக் கொல்லும்
பறிந்த தொரு கர்ப்பத்தை யழியப் பண்ணும்
பண்பாக அவர்களுக்குப் பிள்ளை யில்லை"

அகத்தியர் வைசூரிநூல்.

பெண் மலட்டின் பொதுக் குணம்.

சொற்கப் படிவிலகித் துண்டமுனை கண்ணிணையேன்
சொற்கப் படிவிலகித் தோளுயர்ந்து—சொற்கப்புச்
செவ்வந்தி யம்மையுறழ் சேகரியேன் மாகரியாய்
செவ்வந்தி யம்மையென்று தேர்.

(ப-ரை.) சொற்கப்படி விலகி - மேலாகிய தெய்வலோகத்துப் பெண்களின் ரூபமெப்படியோ அப்படியான லக்ஷணங்களை உடையவளைப் போலே பிரகாசம் மேன்மேலு மொருக்காலே உண்டாயதுக் கொத்ததான, துண்டமுனை-மூக்கு நாசிக் குழைகளிரண்டும் ஒன்றுக் கொன்று வித்தியாசப் பட்டுச் சரிப்படாமலும்; கண்ணிணையென-நேத்திரத்தின் சோடு மேற்படியே யொன்றுக்கொன்று சரிப்படாமலும், சொறுகப்படி-முலைகளின் சோடுகளும் ஒன்றுக்கொன்று சரிப்படாமலும், விலகி மாறுபட்டும்; தோளுயர்ந்து-புசங்களொன்றுக்

கொன்று உயர்ந்தும் தாழ்ந்தும், சொற்கப்பு-ஒருவர் பேசப்பட்ட பேச்சுக்கு ஒவ்வியிருக்கத் தக்கதாயுண்டான; செவ்வந்தி - சிவந்த செவ்வானமானது மாலையிலே செவப்பு மேலாகத் தோன்றும்போது; அம்மையுறழ் - அதில் மழை பெய்யவந்த மேகத்தைப்போலே கறுப்புங்கூடக் கலந்திருக்கின்ற செம்பட்டை மயிருங் கூடிய கூந்தலையுடைத்தான; சேகரியேல்-முடியையும் படைத்தவளா யிருப்பாளாகில், மா-பெரிதான; கரியாய்-பிரமாணிக்கமாக நிச்சயித்துச் சொல்லுகிறேன்; மெய்யாய் - நம்பிக்கையாய் கேட்டுக்கொள்வாய்; செவ் - செம்மையாயறிந்து வாகடசாத்திரங்களிலே சொல்லப்பட்ட; வந்தியம்மை யென்றுதேர் - 'மலடியென்கிற முன்னுளிலே பேர்பெற்ற ஒரு கிழவியென்ற குறிப்புச்சொல் வெளிப்படையாக வழங்கவேண்டியம்மை யென்றுரென்று அறியவேண்டியது' மலடியென்ப தென்றவாறு.

இங்ஙனம் தேரன் யமகவெண்பாவில் மலட்டின் பொதுக் குணத்தைக் கூறினர்.

வகைகளும் குணங்களும்.

மூன்று தரம் ஈன்றுல் தான் மலடு நீங்கின தாகக் கருதப்படுவதால், யூகிமுனியும், ஸ்ரீகண்டரும் ஒருமுறை, இரண்டுமுறை ஈன்ற தாய்களையும் மலடிகள் என்றே கருதினர். மலட்டு ரோகத்தை அவர்கள் நான்கு வகைகளாக வகுத்துள்ளார்கள். அவை: (1) ஆதிமலடு (2) கதலிமலடு, (3) காக்கைமலடு, (4) கர்ப்பமலடாம்.

ஆதிமலட்டின் குணம்.

"நவின்றிடவே யிடுப்பு வயிறு பெருத்துக் காணும்
நயமான மேனியது வூதிக்காணும்
குவின்றிடவே மும்மடிப்பு வயிற்றில் தோன்றும்
குணவதியாந் தேவதா பெண்ணுனலும்
தவின்றிடவே சன்மத்தின் மலடேயாகும்
சதாகாலங் கர்ப்பமது தரியாதென்று
புவின்றிடவே யூகிமுனி சிகிச்சா சாரம்
புகன்றிட்டார் லோகத்து மாந்தர்க்காமே."

ஆதிமலடுள்ள பெண்களுக்கு வயிற்றில் மூன்று மடிப்பும் இடுப்புப் பருத்தும், சரீரந்தூலித்து மிருக்கும். கற்புடைய தேவப் பெண்ணானும் கர்ப்பமுண்டாகாது. இது சன்ம மலடாகும்.

கதலிமலட்டின் குணம்.

"நவிலவே கன்னியர்கள் கதலி போலாம்
நாட்டவே வாழைமரத்தாறு போல
கவிலவே மைந்தனுங் கர்ப்பமொன்று
காதலியாளீன்ற பின் கருப்பமில்லை
தவிலவே கருப்பக்குழி மறைந்துமேதான்
தங்கியே முழுகுநாள் தடையுண்டாகும்
புவிலவே யூகிமுனி சிகிச்சாசாரம்
பூதலத்தில் மானிடற்குப் பூட்டினாரே."

இந்தக்கதலி மலடுடைய பெண்கள் வாழையைப்போல் ஒரு தரம் ஈனுவார்கள். மறுபடியும் கருப்ப முண்டாகாது. கருப்பை தூர்ந்து நாட்கு நாள் மாதவிடாய் தடைப்பட்டுச் சீக்கிரத்தில் மூழ்க்கும் நின்றுவிடும்.

காகமலட்டின் குணம்.

"ஆமேதான் காகத்தின் மலடேயாகும்
அப்பனே கருப்பையில் சோரிகெட்டு
போமேதான் கருப்பையுந் தூர்ந்துமேதான்
போக்கான காயுடனே கறடுபோலாம்
வேமேதானிரண்டு பேர் மைந்தருண்டாம்
வேறுவகைக் கருப்பமது மலடேயாகும்
நாமேதான் சொன்னபடி சிகிச்சாசாரம்
நாட்டுளோர்க் கறியவென்று நவின்றிட்டோமே."

இந்தப் பெண்கள் இருமுறை பிரசவிப்பார்கள். அதற்குப் பிறகு கருப்பையில் சோரிகெட்டுத் தூர்ந்து காய் காய்த்துக் கறடாகிப் போம்.

கர்ப்பமலட்டின் குணம்.

"பூட்டவே கர்ப்பமது வழிந்துமேதான்
பொற்கொடிக்குச் சிசுவது மரித்துப்போகும்

நீட்டமுடன் வருஷாதி முடிவுதோறும்
நிலையாத மைந்தர்களைப் பெறுவதுண்டு
நாட்டமுடன் கருப்ப மலடேயாகும்
நலமான சாந்தியதுமிகவே வேண்டும்
வாட்டமுடன வுஷதநாகப் பிரதிஷ்டை
வளமாகச் செய்துவர மெத்தநன்றே.''

கர்ப்ப மலடுள்ள மாதர்களுக்கு வருஷந்தோறும் கருப்ப முண்டாகி வயிற்றிலேயே பிள்ளைசெத்துச் செத்து விழும். இந்நோய்தீர தேவதா அர்ச்சனை, புற்றுக்குப்பால் வார்ப்பது, தக்க மருந்துகளை யுண்பது ஆகிய பரிகாரங்களைச் செய்யவேண்டும்.

திருமூலர் கருக்கடையில், பெண்மலட்டு ரோகத்தை ஆறுவகைகளாகப் பிரித்து அவைகளின் குணத்தைக் கூறியுள்ளார். அவை வருமாறு:—

1. பிணிக்கலப்பு மலடு.

'நந்தியுரைத்தது நலமான கர்ப்பத்தில்
அந்திய நோய்தானறு வகையாகுங்கேள்
உந்தியில் வாயுவுந்தேயுவுங் கூடிடில்
மந்திமலடாவாள் மரணம்வரை யென்னே.'

2. புழு மலடு.

வரையான கர்ப்பத்தில் மலட்டுப்புழுப்புகில்
விரையான விந்துவை விரைந்ததுவுண்டிடும்
கரையா மலடியாம் காணதைப்போக்கிடில்
துரையான பிள்ளை சுகமாய்ச்செனிக்குமே.

3. சீழ் மலடு.

செனிக்கின்றபிள்ளை திறமானபையினில்
சனிக்கின்றசீநீர் கலந்துள்ளே சிக்கிடில்
பனிக்கின்றரைகால் பரவியேகுத்திடும்
தனிக்கும் பசிபோகும் தான்வயிறுபாரிப்பே.

4. வாயு மலடு.

பாரியவாயு பரிந்துகுழிப்புகில்
தாரிக் கழிந்து சதாநித்தம் கூப்பிடும்

வாரியுடம்பெலாம் வலிக்குமிடைநோவும்
ஆருமறிய அறைந்தவர் சித்தரே.

5. இரத்தமலடு.

சித்தான கர்ப்பத்திற் சேருமிரத்தந்தான்
மத்தாயுருண்டு வாயுப்போலோடிடும்
உற்றபசிபோகு முழன்றே யிரைந்திடும்
வற்றுக் கழிச்சலாம் வன்சூதவாயுவே.

6. சதை மலடு.

சூதான மாமிசஞ் சுழித்திற் கர்ப்பத்தில்
வாதானமேகத்தால் வழங்கிச் செனிப்பிக்கும்
போதாமுடம்பெலாம் புண்போல் மிகநோவும்
நீதாமயக்கமாய் நிர்ச்சிவனுக்குமே.

ஆகின்றநோய்க ளறுவிதம் கர்ப்பத்தில்
பாகொன்றிநின்றுற் பலியாது கர்ப்பந்தான்
வாகின்றதைப் போக்கில் மலடிபெறும்பிள்ளை
ஆகின்ற நோய்க்கெலா மறைந்தமுறை பாரே.

கணிப்பு

மலடு என்று கணித்தல் வெகு எளிதாகும். அது எவ்வகை யென்றும் சிரமமின்றிச் சொல்லி விடலாம். ஆனல் சிகிச்சை செய்வதற்கு முன் அதுவரும் காரணத்தை யுணர்ந்து கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் சிகிச்சை பலனளிக்கும். இல்லாவிடில் பொது சிகிச்சைகளைச் செய்யவேண்டும்.

பேய், பிசாசு பிடித்திருந்தால் சோம்பல் அதிகப்படும். முகம் உருவம் இவை சற்று மாறுபடும். சூதகசந்நி (Hysteria) நோயிலும் அங்ஙனமிருக்கலாம். ஆனல் பூசை முதலியன செய்யும் போது பேயிருந்தால் ஆடும், சூதகசந்நியாயிருந்தால் அங்ஙனம் ஆடாது.

தெய்வக் குற்றங்களாயிருந்தால் கருவழிவு உண்டாகும். மேகரோகங்களிலும் அங்ஙனமுண்டாகும். அவர்களுடைய வரலாற்றைக் கேட்டு உணரலாம். அல்லது இரண்டிற்கும் தக்கசிகிச்சைகளை செய்வது நன்று. பைத்தியமாக இருந்தால் நன்ருகத் தெரிந்துகொள்ளாலம்.

அமாவாசை பௌர்ணமி நாள்களில் அதிகமாகச் சேஷ்டைகள் தோன்றும். சூதகசந்நியாக இருந்தால் அங்ஙனம் அந்நாள்களில் அதிகப்படாது.

கிரக தோஷங்களை ஜாதகங்களைப் பார்த்து அறியலாம்.

கர்ப்பவாயுவாக இருந்தால் அதன் குறி குணங்களா லறியலாம், அவை:

பொருமு முதரந்தனையடர்த்துப் போதமிகவும் வலியுண்டாய்க்
குருதி கழியில் வலிதீருங் கொள்ளுங் கர்ப்ப முறவழிக்கும்
வருடி யிடுப்புத் தொடையுளையு மயக்கு மலத்தை மிகவிறுக்கும்
பெருகப் பணைக்கு முதரத்திற் பேசுங் கர்ப்ப வாயுவிதே.

பரராச சேகரம்.

மலட்டுப்புழுவா லிருந்தால் புழுமலட்டுக் குணத்தின் கீழ்க் கொடுக்கப்பட்ட குணங்களால் அறியலாம்.

புணரும் வேளை தலைநொந்தால் கருக்குழி பாசி பற்றியிருக்கிற தென்றும், உடம்பு நொந்தால் வாயு நிறைந்திருக்கிற தென்றும், நெஞ்சு வலித்திடித்ததானால் தசை வளர்ந்திருக்கிற தென்றும். முதுகு நொந்தால் கிருமியுள்ள தென்றும் கெண்டைக்கால் வலித்த தானால் இரத்தம்கட்டிக் கருக்குழியை மூடி மறைத்திருக்கிற தென் றும், ஏப்பம் விட்டால் கொழுத்திருக்கிற தென்றும் கணிக்கலாம்.

மேகமாக விருந்தால் கருஅழியும். சூதகம் பெரும்பாலும் பல நிறமாகவும், துர்நாற்றத் துடனும் வெளிப்படும். வெள்ளை முதலிய வைகளுமிருக்கும். அன்றியும் மேகத்தினால் பிறக்கும் பலநோய்களின் குறிகுணங்களால் அறியவேண்டும். அவைகளை யெல்லாம் இங்குக் கூறுவது அசாத்தியமாகும்.

வைசூரியினாலிருந்தால் வரலாற்றினால் தெரிந்து கொள்ளலாம்.

பூ ஒதுங்கியிருப்பினும் அடிதள்ளியிருப்பினும் அங்கப்பரீட்சை யினால் அறியலாம்.

பல நோய்கள் இதற்குக் காரணமா யிருப்பதால் இதற்கு நாடி சொல்லாது விடப்பட்டது.